**செய்தி வெளியீடு எண்: 444** **நாள்: 22.07.2019**

**<u>இன்று (22.07.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு கிராம வங்கியின் சார்பில் சேலத்தில் நடைபெற்ற வங்கிக் கடன் வழங்கும் விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு ஆற்றிய உரை:</u>**

தமிழ்நாடு கிராம வங்கியின் சார்பில் மாநில அளவிலான மாபெரும் வங்கிக் கடன் வழங்கும் விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரங்கத்தினுள் நுழைகின்றபொழுது அனைவரும் மகளிராகக் காட்சியளிக்கின்றீர்கள். ஆகவே, இந்தத் திட்டம் மகளிருக்காக பூத்திருக்கின்ற திட்டமாக கருதப்படுகிறது. மண்டல ஊரக வங்கிகள் சிறு, குறு விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், கிராமப் பகுதிகளில் சிறு தொழில் மற்றும் சிறு வியாபாரம் செய்பவர்களுக்கு கடனுதவி வழங்க ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்டபொழுது ஒவ்வொரு வங்கியும், ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களில் மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டன. பொதுவுடைமை வங்கியின் சேவைகள் கிராம மக்களுக்கு எட்டாத கனியாக இருந்த காரணத்தாலும், அரசு நலத் திட்டங்கள் யாவும் பொதுவுடைமை வங்கிகள் மூலம் கிராம மக்களுக்கு முழுமையாக கிடைக்காத காரணத்தாலும் அனைத்துக் கடைக்கோடி கிராம மக்களும் வங்கி சேவைகளை முழுமையாக பெற்றிட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் மண்டல, ஊரக வங்கிகள் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வங்கிகளின் மூலதனத்தில் 50 சதவிகிதத்தினை மத்திய அரசும் 35 சதவிகிதத்தை ஏதேனும் ஒரு தேசிய வங்கியும், மீதமுள்ள 15 சதவிகிதத்தை மாநில அரசும் அளிக்கின்றன. 35 சதவிகிதம் மூலதனம் வழங்கிய தேசிய வங்கி, கிராம வங்கிகளுக்குத் தேவையான

அனைத்து உதவிகளையும் செய்யும். குறிப்பாக, வங்கி செயல்பட வேண்டிய முறை, அதற்கான தொழில்நுட்ப உதவிகள், ஆலோசனைகள் வழங்குவதுடன், கிராம வங்கியின் தலைவராகவும் தேசிய வங்கியின் ஒரு உயர் அதிகாரியே செயல்படுவார்.

வங்கிகள் இணைவது என்பது உலக மயமாக்கலுக்குப் பின் சாதாரண நிகழ்வு என்றாகிவிட்டது. கிராம வங்கிகளும் அதுபோன்று மத்திய அரசால் இணைக்கப்பட்டு வருகின்றன. 196 ஊரக வங்கிகள் இருந்த நிலைமை மாறி, தற்போது 45 வங்கிகள் மட்டுமே உள்ளன. ஆனால், சிறு, குறு வங்கிகள் சேர்ந்து பெரிய வங்கியாக உருவானதால் மற்ற தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளுக்கு இணையாக செயல்பட்டு வருகிறது. மத்திய அரசும், மாநில அளவிலான ஒரு ஊரக வங்கி என்ற நிலைப்பாட்டினை செயல்படுத்த முயற்சிகள் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகத் தான் தமிழகத்தில் இருந்த பாண்டியன் கிராம வங்கியும், பல்லவன் கிராம வங்கியும் இணைந்து தமிழ்நாடு கிராம வங்கியாக உருவெடுத்துள்ளது. பாண்டியன் கிராம வங்கி 9.3.1977–ல் தென்தமிழகத்தின் பிரிக்கப்படாத இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் துவக்கப்பட்டது. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்பட்டு வந்த அதியமான் கிராம வங்கியும், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் செயல்பட்டு வந்த வள்ளலார் கிராம வங்கியும் 31.8.2006–ல் ஒன்றிணைந்து பல்லவன் கிராம வங்கியாக உதயமானது. இந்த வங்கி, சென்னை மாவட்டம் தவிர தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுகிறது. சென்னை நகரப் பகுதிகளிலும் தமிழ்நாடு கிராம வங்கியின் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கிராம வங்கிக்கு தமிழ்நாட்டில் தற்சமயம் 630 கிளைகள் உள்ளன. இது வெகுவிரைவில் ஆயிரத்தை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு

வருவதாக வங்கியைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளது உண்மையிலே மகிழ்ச்சியளிக்கின்றது. தமிழ்நாடு கிராம வங்கியின் தற்போதைய மொத்த வர்த்தகம் ரூபாய் 23 ஆயிரம் கோடிக்கு மேல் உள்ளது. பல வங்கிகள் நஷ்டத்தில் செயல்பட்டு வந்தாலும், பல்லவன் கிராம வங்கியும், பாண்டியன் கிராம வங்கியும் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருவதை உணர்ந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மற்ற வங்கிகளைக் காட்டிலும், இங்கு வாராக் கடனும் மிகக் குறைவென்றும் அறிகிறேன். மற்ற வங்கிகளில் வாராக்கடன் 10 விழுக்காட்டிற்கு மேல் உள்ள நிலையில் தமிழ்நாடு கிராம வங்கியின் வாராக்கடன் 1.79 விழுக்காடு என்பது பெருமைக்குரிய விஷயமாகும். இந்த வங்கி மிகப்பெரிய நிறுவனங்களுக்கு பெரும்பாலும் கடன் வழங்குவதில்லை. இந்த வங்கி விவசாயிகளுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும், ஏழை, எளிய மக்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே வந்திருப்பவர்கள் பெரும்பாலும் ஏழை, எளியோர், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று பல்வேறு உதவிகளை வங்கியின் மூலமாக நாடக்கூடிய அப்படிப்பட்ட நல்ல உள்ளங்களுக்கு இந்த வங்கி பேருதவியாக செயல்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. வங்கியின் குறைந்த அளவிலான வாராக்கடன் சாமான்ய மக்களின் நேர்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு. சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதில் 99 விழுக்காடு வசூலாகிறது என்று அறிந்து பெருமைப்படுகின்றேன், உண்மையிலேயே பாராட்டுக்குரியது. இந்த வங்கியில் வாங்கிய கடனை இங்கு வந்திருக்கக்கூடிய சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் 99 விழுக்காடு திரும்பச் செலுத்தி வரலாறு படைத்திருக்கின்றீர்கள். இந்த வங்கி உங்கள் வங்கியாக கருதுகின்றீர்கள். இந்த வங்கி செழித்தால் தான், தாங்கள் நலம் பெறவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே,

வாங்கிய கடனை முறையாக செலுத்தி, மேலும் அந்தத் தொழில் வளர்வதற்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கின்றவர்களுக்கு, இந்த வங்கிக்கு உறுதுணையாக இருப்பது பாராட்டுக்குரியது. சில சுய உதவிக் குழுக்கள் ரூபாய் 20 இலட்சம் வரையில் எந்தவொரு பிணையமும் இல்லாமல் கடனுதவி பெற்று வருகிறார்கள் என்று அறிகின்றேன். மற்ற வங்கிகளில் பிணையம் இல்லாமல் கடன் கொடுக்கமாட்டார்கள்.

இந்த வங்கியானது மலைவாழ் மக்களின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் விதமாக அம்பாசமுத்திரம் அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தில் வாழும் மலைவாழ் மக்களுக்கு சோலார் அமைத்துக் கொடுத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்துள்ளார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். ஏனென்றால், மலைவாழ் மக்கள் மிக உயரமான மலைப் பகுதியில் வாழ்கின்ற காரணத்தினால் அங்கே மின்சார வசதி வழங்குவது என்பது மிகவும் கடினமானது. அங்கே மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு மின் இணைப்பு கொடுக்க வேண்டும், வனம் அடர்ந்த பகுதியாக இருப்பதினால் வனத்துறையின் அனுமதி பெற வேண்டும். புயல் வரும் காலங்களில் மின் கம்பங்கள் மீது மரங்கள் விழுந்து மின் தடை ஏற்படுவதையும் மாற்றும்விதமாக மலைவாழ் மக்களுக்கு பயன்படும்விதமாக சூரிய ஒளி மின்சக்தியை வங்கி அளித்திருப்பது. மத்திய, மற்றும் மாநில அரசு மானியத்துடன் கடன் வழங்கி வருவதை எண்ணி பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க, தமிழ்நாடு கிராம வங்கி விவசாயிகளின் வளர்ச்சிக்காகவும், கிராமத் தொழிலாளர்களின் வளர்ச்சிக்காகவும் கடன் வழங்கி வருவதற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். பனைத் தொழிலாளர்கள் மேம்பாட்டிற்காகவும்,

இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும் மானியத்துடன் கூடிய சிறப்புக் கடன் திட்டங்களை இந்த வங்கி செயல்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடத்தில் மட்டும் **2018–19–ல் 4** சதவிகித வட்டியில் **13.52** இலட்சம் பயனாளிகளுக்கு ரூபாய் **9,210** கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதை எண்ணும்போது, இந்த வங்கியானது விவசாயிகள் வளர்ச்சியில் பெரிதும் உதவி வருகிறது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. விவசாயிகளுக்கு குறைந்த வட்டியிலே கடன் வழங்கப்படுகிறது. இது கந்து வட்டிக் கடனிலிருந்து ஏழை, எளிய மக்களை விடுவிப்பதற்கும் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது என்று அறிகின்றேன். பெண்களின் முன்னேற்றத்திற்காக பெண் சக்தி என்ற திட்டத்தின் மூலமாக பெண் தொழில்முனைவோருக்கு கடனுதவியும் இவ்வங்கி செய்து வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சிறப்புக் கடனுதவி திட்டத்தை செயல்படுத்தவுள்ளதாகவும் அதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையத்துடன் தொழில் மேம்பாட்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் இட்டுள்ளதாக இந்த வங்கி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். வங்கி சேவையை அனைத்து இல்லங்களுக்கும் எடுத்துச் செல்லும் நோக்குடன் **738** வணிகத் தொடர்பாளர்களை நியமித்து இவர்கள் மூலமாக முதியோர் ஓய்வூதியம் மற்றும் அரசு நலத் திட்டங்கள் வாயிலாக வழங்கப்படும் உதவித் தொகைகளை பயனாளிகளின் இல்லங்களுக்கே நேரே சென்று வழங்கி வருவது பாராட்டுக்குரியதாகும். இந்த வணிக தொடர்பாளர்கள் மூலம் **70** ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் அரசின் உதவித் தொகைகளைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். மக்களுக்கு வங்கி சேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்

நோக்குடன் 22 இடங்களில் நிதிசார் கல்வி மையங்களை வங்கி நடத்தி வருவதாகவும் மேலும், வங்கியின் 630 கிளைகளின் மூலமாக மாநில அளவில் கடந்த 16.7.2019 அன்று மாநில அளவில் நிதிசார் கல்வி முகாம்களை நடத்தியுள்ளதாகவும் வங்கியாளர்கள் தெரிவித்துள்ளனர். இவை தவிர, கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று நடமாடும் நிதிசார் கல்வி மையங்களையும் நடத்தி வருவதாக கூறுகின்றனர்.

தமிழகத்திலேயே மாதிரித் திட்டமாக நபார்டு வங்கியினால் செயல்படுத்தப்பட்டு ஒருங்கிணைந்த வங்கி சேவை திட்டத்தினை தருமபுரி மாவட்டத்திலுள்ள 5 கிராமங்களில் இவ்வங்கி சிறப்பாக செயல்படுத்தி அதற்காக நபார்டு விருதையும் பெற்றுள்ளது பாராட்டுக்குரியது. பாண்டியன் கிராம வங்கியும் பல்லவன் கிராம வங்கியும் தொடர்ந்து பல வருடங்களாக சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குவதில் சிறந்த முறையில் பணியாற்றி வருவதற்கு தமிழ்நாடு அரசு மற்றும் நபார்டு வங்கியின் விருதுகளைப் பெற்று வருகிறது. தேசிய அளவில் சிறந்த ஊரக வங்கியினை அசோசெம் என்கிற ஸ்காட்ச் விருதினையும், மத்திய அரசின் அடல் பென்ஷன் யோஜனா என்ற ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை ஆணையத்தின் விருதுகளை பலமுறை பல்லவன் கிராம வங்கி பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.

தமிழ்நாடு கிராம வங்கிகளின் பணியில் சிகரம் வைத்ததுபோல் இன்று மாநில அளவிலான மாபெரும் கடன் வழங்கும் விழா நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் 28506 பயனாளிகளுக்கு ரூபாய் 109 கோடியே 80 இலட்சம் கடனுதவி இந்நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படுகிறது. நான் கடந்த 10.07.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் பல்லவன் கிராம வங்கி மற்றும் பாண்டியன் கிராம வங்கி ஆகிய

இரண்டு மண்டல ஊரக வங்கிகள் 1.4.2010 அன்று ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் 630 கிளைகளைக் கொண்ட தமிழ்நாடு கிராம வங்கி என்று பெயரில் சேலத்தினை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதற்கென தமிழ்நாடு கிராம வங்கியும் ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த ஒரு வளாகம் அமைக்க சேலத்தில் இரண்டு ஏக்கர் அரசு நிலம் வழங்கப்படும். இவ்வளாகம் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகள் அனைத்தையும் வழங்கும் ஒரு மையமாக செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்ற அறிவிப்பினை நான் வெளியிட்டேன். இதனை செயல்படுத்தும்விதமாக சேலம் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு கிராம வங்கியும், ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த ஒரு வளாகம் அமைக்க சேலம் மேற்குக் கோட்டத்திற்கு உட்பட்ட ஜாகீர் அம்மாபாளையம் என்ற இடத்தில் 2 ஏக்கர் நிலம் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாடு கிராம வங்கியின் பணிகள் மென்மேலும் சிறக்கவும் மக்களுக்கு தொடர்ந்து இவ்வங்கி சிறப்பான சேவைகளை அளித்திடவும் இவ்வங்கி சிறந்த வளர்ச்சியினை அடைந்திடவும் என்னுடைய வாழ்த்துக்களை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, சேலம் மாவட்டத்தில் மட்டும் ஊரகப் பகுதியில் 14,985 மகளிர் சுயஉதவிக் குழுக்களும் நகரப் பகுதிகளில் 11,230 மகளிர் சுய உதவிக் குழுக்களும் ஆக மொத்தம் 26,215 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகிறன. சேலம் மாவட்டத்தில் மட்டும் முழுக்க, முழுக்க, மகளிர் அனைவரும் ஒன்றாக இணைந்து சுயமாக தொழில் துவங்கக்கூடிய ஒரு அமைப்பை இங்கே ஏற்படுத்தியிருக்கின்றீர்கள். கடந்த

8 ஆண்டுகளில், 87,350 குழுக்களுக்கு ரூபாய் 2,378 கோடியே 88 இலட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டில் மட்டும் ரூபாய் 624 கோடி வங்கிக் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இலக்கையும் தாண்டி ரூபாய் 646.80 கோடி வங்கிக் கடன் 14,743 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். இது 104 சதவிகிதம் சாதனை படைத்துள்ளது. இது, கடந்த 26.2.2019 அன்று சேலத்தில் நடைபெற்ற விழாவில் மட்டும் 3,186 குழுக்களுக்கு ரூபாய் 146 கோடியே 57 இலட்சத்திற்கு கடன் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், 2019–2020 நடப்பாண்டில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 650 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 1,747 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 65 கோடியே 45 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 239 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 1 கோடியே 19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 161 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதல்கட்ட நிதியாக ரூபாய் 2 கோடியே 47 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் 250 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதலீட்டு நிதியாக ரூபாய் 7 கோடியே 27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இதுபோன்று மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்காக ஏராளமான கடனுதவி வழங்கி அவர்கள் சுயமாக தொழில் தொடங்கி அவர்கள் சொந்தக்காலில் நிற்கக்கூடிய சூழ்நிலையை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது.

அதே போல தமிழ்நாடு கிராம வங்கி என்று பெயரைப் பார்க்கும்பொழுதே கிராமத்தினுடைய அக்கறை கொண்ட ஒரு வங்கி தமிழ்நாடு கிராம வங்கி ஒன்றுதான்.

மற்ற வங்கிகளில் எளிமையாக கடன் பெற முடியாது. ஆனால், தமிழ்நாடு கிராம வங்கியைப் பார்க்கின்றபொழுது முழுக்க, முழுக்க விவசாயிகளை சார்ந்த தொழில்களுக்கும், ஏழை எளியவர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் அமைத்து, அந்த அமைப்புகளுக்குத் தேவையான உதவி வழங்குவதற்காக இந்த வங்கி முன்னுரிமை கொடுக்கிறது. இந்த வங்கியில் வட்டி குறைவாக இருக்கின்றது. மேலும், கேட்ட நேரத்திற்கு உங்களுக்குத் தேவையான நிதி உதவியையும் இந்த வங்கி அளித்து வருகிறது. விவசாயிகளுக்கு பயிர்க்கடன், பால் உற்பத்தி செய்ய கடன் போன்றவை இந்த வங்கி கொடுக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டிலேயே அதிக பால் உற்பத்தியாளர்களைக் கொண்ட மாவட்டமாகவும், பால் உற்பத்தியில் முதலிடம் வகிப்பதும் நம்முடைய சேலம் மாவட்டம்தான். பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு தேவையான கால்நடைகளைப் பெற்று, வளர்ப்பதற்கு ஒரு நபருக்கு ரூ.**3** லட்சம் வரை தமிழ்நாடு கிராம வங்கி வழங்குவதாக இந்த வங்கியின் அலுவலர்கள் தெரிவிக்கின்றார்கள். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற விவசாயக் குடிமக்கள், விவசாயத் தொழிலாளர்கள் எல்லோரும் தமிழ்நாடு கிராம வங்கியின் மூலமாக கடனுதவி பெற்று அங்கே கறவை பசுமாடுகளை வளர்த்து, அதன் மூலமாக பாலை கறந்து ஆங்காங்கே இருக்கின்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்கின்ற பொழுது அவர்களுக்கு வருமானம் கிடைக்கிறது. அண்மையில் சட்டமன்றத்தில், பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை பிரித்தேன். திருநெல்வேலியை பிரித்து தூத்துக்குடிக்கு கொடுத்தேன், திருச்சியை பிரித்து கரூரில் கொடுத்தோம், கிருஷ்ணகிரியை பிரித்து தர்மபுரிக்கு கொடுத்தோம். இப்படி பல இடங்களில் புதியபுதிய

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை நிறுவுகின்றபொழுது, அந்தப் பகுதியில் இருக்கின்ற பால் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அதிக கால்நடைகளை வளர்த்து பால் உற்பத்தியை பெருக்குவது மட்டுமல்லாமல் சுயமாக தொழில் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்குவதற்காக இப்படி ஏற்கனவே பல்வேறு மாவட்டங்களை உள்ளடக்கிய பெரிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை பிரித்து நிர்வாகக் காரணத்திற்காகவும், பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்ற பாலை குறித்த காலத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு கொண்டு செல்வதற்கு வசதியாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சங்கங்களுக்கெல்லாம் இன்றைக்கு தமிழ்நாடு கிராம வங்கி உதவி செய்கின்றது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. விவசாயம் செழிக்க வேண்டுமென்றால் நீர் வேண்டும். ஒரு மனிதனுக்கு உயிர் எப்படியோ, அதுபோல விவசாயத்திற்கு நீர் முக்கியம். ஆகவே, நீர் மேலாண்மைத் திட்டத்தை கொண்டுவந்து, முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக அம்மாவினுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. குடிமராமத்து திட்டத்தின் மூலமாக ஆங்காங்கே உள்ள ஏரிகள், குளங்கள் ஆழப்படுத்தப்படுகின்றன. பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் ஓடையின் குறுக்கே, நதியின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி நீர் நிலைகளை உயர்த்தி, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைக்கிறது, குடிப்பதற்கான தேவையான நீரை அரசு பெற்றுத் தருவதற்காக இந்த திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். அதன் வழியாக, சேலம் மாவட்டத்தில், பருவகாலங்களில் அதிகமாக மழை பெய்கின்ற பொழுது அந்த மழைநீர்

வீணாக கடலிலே கலக்கின்றது. இப்படிப்பட்ட காலங்களில் காவிரி ஆற்றில் உபரியாக செல்கின்ற நீரை பயன்படுத்தி ரூபாய் 565 கோடியில், 100 ஏரிகளுக்கு தண்ணீரை கொண்டு செல்கின்ற திட்டத்தை வகுத்துக் கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட இரண்டாண்டுகளில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். அந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற ஓமலூர், மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 100 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அந்த 100 ஏரிகளில் ரூபாய் 565 கோடி செலவிலே காவிரியில் இருக்கின்ற உபரிநீர் வருகின்ற காலகட்டத்தில் அங்கேயிருந்து drip irrigation மூலமாக எடுத்துச் சென்று அந்த தண்ணீர் ஏரிகளில் நிரப்பப்படும். இதையெல்லாம் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு பயனளிக்கக்கூடிய திட்டத்தை நம்முடைய அரசு இந்த மாவட்ட மக்களுக்கு அர்ப்பணித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது, நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக நான் இருந்த பொழுது வறட்சியாக இருக்கும் ஓமலூர் மற்றும் தாரமங்கலம் வட்டாரத்திற்கு சென்று பார்த்தேன். ஓமலூர் பகுதியில் மலர் அதிகமாக உற்பத்தி செய்கிறோம். அங்குள்ள விவசாயிகள் எல்லாம் எங்களுக்கு போதிய விலை கிடைப்பதில்லை, பெங்களூருக்கு சென்று தான் இந்த மலர்களை விற்பனை செய்கின்றோம் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலேயே மலர்கள் விற்பனை செய்வதற்கு ஒரு மையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பே கோரிக்கை வைத்தார்கள். சேலம், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள விவசாயப் பெருமக்கள் அதிகமாக மலர் சாகுபடி

செய்கிறார்கள். ஒட்டுமொத்த 4 மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று அம்மாவினுடைய அரசு ஒசூரில் மிகப்பிரம்மாண்டமான உலகத் தரத்திற்கேற்ற மலர் ஏல மையம் ஒன்றை ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் அமைக்கவுள்ளது. இது சர்வதேச ஏல மையமாக நடத்தப்படுவதால் பல்வேறு நாடுகளிலிருந்து, மாநிலங்களிலிருந்து வரக்கூடிய வியாபாரிகள் மலர்களை வெளிநாட்டிற்கும் அனுப்பலாம்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக அதனை முறையாக அரசு வாங்கி பயன்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு 10 மாவட்டங்களின் தலைமையிடத்தில் காய்கறி, பழங்களை விற்பனை செய்யக்கூடிய விற்பனை மையத்தை ஏற்படுத்தவிருக்கின்றோம்.

சென்னைக்கு அருகே 300 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 2 ஆயிரம் கோடியில் உணவுப் பூங்கா அமைக்கவிருக்கின்றோம். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களை உணவுப் பூங்காவில் விற்பனை செய்கின்ற பொழுது உரிய விலை கிடைக்கும். இதற்கும் மேலாக, 900 ஏக்கரில், ரூபாய் 1,000 கோடியில் சேலம் மாவட்டம், தலைவாசலில் கால்நடைகளை வளர்க்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு அனைத்து அம்சங்களுடன் கூடிய ஆசியாவிலேயே பிரம்மாண்டமான கால்நடைப் பூங்கா ஒன்றை உருவாக்கவிருக்கின்றோம். பால் உற்பத்திக்கு தேவையான உயர் ஜாதிப் பசுக்கள் மற்றும் ஆடு, கோழி, நாய், பன்றி அனைத்தையும் வளர்க்க அங்கே கால்நடை ஆராய்ச்சி நிலையம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரியையும் துவக்கவிருக்கின்றோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு தாலிக்குத் தங்கத்துடன் நிதியுதவியும் கொடுக்கின்றது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உதவித் தொகை ரூபாய் 6 ஆயிரத்திலிருந்து ரூபாய் 12 ஆயிரமாக உயர்த்தப்பட்டு, தற்பொழுது ரூபாய் 18 ஆயிரமாக வழங்கப்படுகிறது. இப்பொழுது மூன்றாம் கட்டமாக, அம்மா மகப்பேறு என்ற திட்டத்தை அறிவித்து ஊட்டச்சத்து உள்ள பொருட்கள் வழங்கப்படுகின்றது. சேலத்தில் பிரம்மாண்டமான மகப்பேறு மருத்துவமனை கட்டிக் கொடுத்திருக்கின்றோம். அதில், பச்சிளம் குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை மையம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தைகள் பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. ஏழை, எளிய மாணவர்களுக்கு நல்ல கல்வித் தரம் கொடுத்து, உயர் கல்வி படிக்கக்கூடிய அளவிற்கு அரசு உதவி செய்கிறது. விஞ்ஞானக் கல்வி பெறுவதற்காக நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 76 அரசு கல்லூரிகளுக்கு அம்மா அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதேபோல, பொறியியல், வேளாண்மை, மருத்துவம், ஐடிஐ, கால்நடை மருத்துவக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. இது போன்ற காரணங்களினால், தமிழ்நாட்டில் உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. சேலம் மாவட்டத்தில் புதிய சட்டக் கல்லூரி இந்த ஆண்டு முதல் செயல்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிய திட்டங்களை அம்மா அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**